## களம் தேர்வு – 03

1. **கீழ்க்கண்டவற்றை ஆராய்ந்து விடையளி (சரியான இணைகள் எத்தனை)**

**1. தண்மனம் - தன்னுடைய உள்ளம்**    **2. தன்மணம் - தன்னுடைய நாற்றம்**

**3. தன்மனம் - தன்னுடைய உள்ளம்**    **4. தண்மணம் - தன்னுடைய நாற்றம்**

(A) **1 இணை**    (B) **2 இணை**    (C) **3 இணை**    (D) **4 இணை**

2. **பொருத்துக**

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) **பசு** | - | **1) கன்று** | | (A) | 1 | 2 | 3 | 4 |
| b) **ஆடு** | - | **2) குட்டி** | | (B) | 3 | 2 | 4 | 1 |
| c) **யானை** | - | **3) கதறும்** | | (C) | 1 | 4 | 2 | 3 |
| d) **ஆடு** | - | **4) கத்தும்** | | (D) | 3 | 4 | 1 | 2 |

3. **ஓரெழுத்து ஒரு மொழியின் வரிசைகளில் பிழையுற்றதைத் தேர்க**

(A) **மகர வரிசை - 5 எழுத்துகள்**    (B) **தகர வரிசை - 5 எழுத்துகள்**

(C) **நகர வரிசை - 5 எழுத்துகள்**    (D) **பகர வரிசை - 5 எழுத்துகள்**

4. **'ஏவலன்' என்ற சொல்லின் பொருள் காண்க**

(A) **அம்புவிடுபவன்**    (B) **கடமை புரிபவன்**

(C) **பொருள் ஈட்டுபவன்**    (D) **வேட்டையாடுபவன்**

5. **மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கும் எழுத்துகள்**

(A) **ச், ஞ்**    (B) **ட், ண்**    (C) **ர், ழ்**    (D) **ற், ன்**

6. **கோழியின் ஒலி மரபைக் காண்க**

(A) **கூவும்**    (B) **குனுகும்**    (C) **குழறும்**    (D) **கொக்கரிக்கும்**

7. **சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக**

(A) **உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்**

(B) **தமிழ்மொழி வாழட்டும் உலகம் உள்ளவரையிலும்**

(C) **உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்**

(D) **உலகம் உள்ளவரையிலும் வாழட்டும் தமிழ்மொழி**

8. Articulatory Phonetics - **கலைச்சொல் அறிக**

(A) **மூக்கொலி**    (B) **ஒலிபிறப்பியல்**    (C) **மெய்யொலி**    (D) **உயிரொலி**

9. **'சேகரம்' - என்பதன் சரியான சொற்பொருள்**

(A) **கூட்டம்**    (B) **சேதம்**    (C) **சரியாக**    (D) **மிகவும்**

10. கூற்று 1 : செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் இவை ஆறும் வெளிப்படையாக அமையும் வினைமுற்று– தெரிநிலை வினைமுற்று

கூற்று 2 : பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகியவற்றுள் ஒன்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டது – குறிப்பு வினைமுற்று

(A) கூற்று1, 2 சரி (B) கூற்று 1 தவறு / 2 சரி
(C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 சரி / 2 தவறு

11. இருதிணை, ஐம்பால் மூவிடங்களை காட்டும் வினைமுற்று எது?

(A) தெரிநிலை வினைமுற்று (B) குறிப்பு வினைமுற்று
(C) ஏவல் வினைமுற்று (D) வியங்கோள் வினைமுற்று

12. ஏவல் வினைமுற்றின் பண்புகளில் பொருந்தாததைத் தேர்ந்தெடு

(A) முன்னிலையில் வரும் (B) ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை
(C) கட்டளைப் பொருளை உணர்த்தும் (D) விகுதி பெற்றும் பெறாமலும் வரும்

13. எந்த பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று தன்மை இடத்தில் வராது?

(A) வாழ்த்தல் (B) வைதல் (C) வேண்டல் (D) விதித்தல்

14. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் – எவ்வகைத் தொடர்

(A) செய்தித் தொடர் (B) வினாத்தொடர் (C) விழைவுத் தொடர் (D) உணர்ச்சித் தொடர்

15. காடு மிகவும் அழகானது – தொடர் வகை காண்க

(A) வினாத் தொடர் (B) விழைவுத் தொடர் (C) உணர்ச்சித் தொடர் (D) செய்தித் தொடர்

16. ‘உண்’ – என்பதன் முன்னிலை வினைமுற்றில் பொருந்தாதது எது?

(A) உண்டாய் (B) உண்டீர் (C) உண்டான் (D) உண்பீர்

17. ‘உறங்கினான்’ என்பதன் வேர்ச்சொல் காண்க

(A) உற (B) உறங்கி (C) உறங்கு (D) உறக்கம்

18. பொருந்தாத எதிர்ச்சொற்களைக் கொண்ட இணைகள் எத்தனை?

1. கோடாமை × நடுநிலைமை நீங்குகை
2. தகவிலர் × நடுநிலை உடையவர்
3. பயன் × பயவா
4. காவாதான் × காத்துக் கொள்ளாதவன்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

19. சான்றோருக்கு அணியாகக் கருதப்படுவது எது?

(A) மனத்தை அடக்கும் வல்லமை (B) களர்நிலத்தை ஒத்திருக்கும் தன்மை
(C) நடுநிலைமையுடன் செயல்படுவது (D) அவருக்குப்பின் புகழ் எஞ்சி நிற்பது

20. பொருட்பாவில் உள்ள இயல்களில் பொருந்தாதது எது?

(A) ஒழிபியல் (B) ஊழியல் (C) அமைச்சியல் (D) அரசியல்

21. கூற்று 1 : செயலையும், காலத்தையும் வெளிப்படையாக காட்டும் பெயரெச்சம் – தெரிநிலைப் பெயரெச்சம்

கூற்று 2 : பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் – குறிப்புப் பெயரெச்சம்

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

22. சரியான பெயரெச்சத்தைத் தேர்ந்தெடு

(A) ஓட (B) பாய (C) கூறிய (D) எழுத

23. உவமைத்தொடர்களை சரியான பொருளுடன் பொருத்துக

a) உடலும் உயிரும் போல - 1) உலக அறிவின்மை

b) பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல - 2) புகழ் ஓங்குதல்

c) கிணற்றுத்தவளை போல - 3) கடமை தவறுதல்

d) வேலியே பயிரை மேய்ந்தது போல - 4) ஒற்றுமை

e) குன்றின் மேலிட்ட விளக்கு போல - 5) பிடித்த செயல் எதிர்பாராமல் நடப்பது

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 5 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 5 | 4 |
| (C) | 4 | 5 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 5 | 2 | 4 | 3 |

24. கூற்று 1 : காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல என்னும் உவமைத் தொடரின் பொருள் – எதிர்பாரா நிகழ்வு

கூற்று 2 : கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல என்னும் உவமைத் தொடரின் பொருள் – தற்செயல் நிகழ்வு

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

25. "குருகு" என்ற பறவை இனம் நீரை நீக்கி பாலை மட்டும் அருந்தும் – என்ற கருத்தை கூறும் நூல் எது?

(A) மூதுரை (B) பழமொழி நானூறு (C) நல்வழி (D) நாலடியார்

26. காமராசர் பதவியைத் துறந்தார் – இத்தொடரின் பொருள் வகை காண்க

(A) ஆக்கல் (B) அழித்தல் (C) அடைதல் (D) நீத்தல்

27. ஐந்தாம் வேற்றுமை மற்றும் ஏழாம் வேற்றுமை என இரண்டு வேற்றுமைகளிலும் இடம் பெறும் வேற்றுமை உருபு எது?

(A) இன் (B) இல் (C) மேல் (D) கண்

28. நான்காம் வேற்றுமையின் பொருளில் தவறானது எது?

(A) முறை (B) அழித்தல் (C) பகை (D) நட்பு

29. தவறான இணையைத் தேர்ந்தெடு

(A) முதல் வேற்றுமை – எழுவாய் வேற்றுமை

(B) இரண்டாம் வேற்றுமை – செயப்படுபொருள் வேற்றுமை

(C) ஐந்தாம் வேற்றுமை – உரிமைப்பொருள் வேற்றுமை

(D) எட்டாம் வேற்றுமை – விளி வேற்றுமை

30. காற்புள்ளி பயன்படுத்தப்படும் இடங்களில் சரியற்றது எது?

(A) விளிமுன் காற்புள்ளி வரும் (B) வினையெச்சத்திற்கு பின் காற்புள்ளி வரும்

(C) மேற்கோள் குறிகளுக்கு முன் காற்புள்ளி வரும் (D) முகவரியின் இறுதி வரியில் காற்புள்ளி வரும்

31. சரியான நிறுத்தற்குறி பயன்படுத்தப்பட்ட தொடரைத் தேர்க

(A) தமிழ்மொழி செம்மையானது, வலிமையானது, இளமையானது.

(B) தமிழ்மொழி செம்மையானது; வலிமையானது; இளமையானது.

(C) தமிழ்மொழி : செம்மையானது, வலிமையானது, இளமையானது.

(D) தமிழ்மொழி "செம்மையானது, வலிமையானது, இளமையானது".

32. காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் ---- எனப்படும்.

(A) உவமைத்தொகை (B) பண்புத்தொகை (C) வினைத்தொகை (D) உம்மைத்தொகை

33. கூற்று 1: தலைவணங்கு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

கூற்று 2: பொற்சிலை - மூன்றாம் வேற்றுமைத்தொகை

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

34. பொருத்துக

a) மல்லிகை மலர்ந்தது - 1) விளித்தொடர்

b) நண்பா படி - 2) உரிச்சொல் தொடர்

c) சென்றனர் வீரர் - 3) வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

d) கவிதையை எழுதினார் - 4) வினைமுற்றுத் தொடர்

e) சாலவும் நன்று - 5) எழுவாய்த் தொடர்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 5 | 1 | 4 | 3 | 2 |
| (B) | 5 | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 5 | 3 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 5 | 2 |

35. 'கண்ணோடாது' என்பதன் எதிர்சொல் காண்க.

(A) ஒருபக்கம் சாய்வது (B) இரக்கம் கொள்ளாது

(C) ஒருபக்கம் சாயாது (D) இறக்கம் கொள்வது

36. 'சாதல் நீங்க எமக்கீந் தனையே' - இக்கூற்றை கூறியவர் யார்?

(A) திருவள்ளுவர் (B) நல்லாதனார் (C) ஔவையார் (D) கூடலூர் கிழார்

37. கீழ்க்கண்ட எந்த இலக்கண பொருண்மையில் வல்லினம் மிகாது?

(A) இகர ஈற்று வினையெச்சம் (B) உவமைத்தொகை

(C) அகர ஈற்று பெயரெச்சம் (D) அப்படி என்னும் சொல்லை அடுத்து

38. சந்திப்பிழையுற்ற தொடரைத் தேர்க

(A) வளவன் தான் படித்த பள்ளிக்குச் சென்றான்

(B) தந்தை மகனை வரும்படிச் சொன்னார்

(C) எழிலன் பெரிய யானையைக் காண ஓடிச் சென்றான்

(D) இலக்கியா தமிழ்த்தாயைப் போற்றிப் பாடினாள்

39. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) THICKET | - | 1) சிறுதானியங்கள் | (A) | 2 | 1 | 4 | 3 |
| b) MILLETS | - | 2) புதர் | (B) | 1 | 2 | 3 | 4 |
| c) RITS | - | 3) குறிக்கோள் | (C) | 1 | 3 | 2 | 4 |
| d) OBJECTIVE | - | 4) சடங்கு | (D) | 3 | 4 | 1 | 2 |

40. பிழையுற்றதைத் தேர்க

(A) பாவைச் சென்றாள் (B) எப்படிச் சென்றாள் (C) கல்லணை கட்டினார் (D) ஊறுகாய்

41. கொடியனார் – என்ற சொல்லின் எதிர்ச்சொல் அறிக

(A) மகளிர் (B) ஆடவர் (C) மேதையர் (D) பேதையர்

42. உவமைத் தொடருக்கு பொருத்தமான பொருளைத் தேர்க "விழலுக்கு இறைத்த நீர் போல"

(A) வெளிப்படைத்தன்மை (B) தடையின்றி மிகுதியாக

(C) பயனற்ற செயல் (D) தற்செயல் நிகழ்வு

43. பொருத்தமான சொற்களால் நிரப்புக

1. சிறுமி ------ (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்

2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் ------ (தனது / தமது) உழைப்பை நல்கினார்

(A) தனது, தமது (B) தனது, தனது (C) தமது, தனது (D) தமது, தமது

44. சொல்லையும், பொருளையும் பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) உவசமம் | - | 1) நண்பர் | (A) | 4 | 3 | 1 | 2 |
| b) ஓர்தல் | - | 2) நட்பு | (B) | 4 | 1 | 2 | 3 |
| c) கிளைஞர் | - | 3) நல்லறிவு | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) கேண்மை | - | 4) அடங்கி இருத்தல் | (D) | 1 | 2 | 3 | 4 |

45. திரிந்து + அற்று என்பதைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) திரிந்தது அற்று (B) திரிந்தற்று (C) திரிந்துற்று (D) திரிவுற்று

46. பொருத்துக

a) இன்பம் தருவது - 1) நற்பண்பில்லாதவன் பெற்றபெருஞ்செல்வம்

b) நட்பு என்பது - 2) குன்றிமணியளவு தவறு

c) பெருமையை அழிப்பது - 3) செல்வம் மிகுந்த காலம்

d) பணிவு கொள்ளும் காலம் - 4) சிரித்து மகிழ மட்டுமின்றி

e) பயனின்றி அழிவது - 5) பண்புடையவர் நட்பு

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 5 | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 5 | 2 |
| (C) | 5 | 4 | 2 | 3 | 1 |
| (D) | 5 | 4 | 3 | 1 | 2 |

47. தவறான ஒன்றைத் தேர்க

(A) தொண்டு - Integrity (B) தத்துவம் - Philosophy

(C) பகுத்தறிவு - Rational (D) சீர்திருத்தம் - Reform

48. பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ------ ஆகும்.

(A) எழுவாய் (B) செயப்படுபொருள் (C) பயனிலை (D) வேற்றுமை

49. உடனிகழ்ச்சிப் பொருளில் ----- வேற்றுமை வரும்

(A) இரண்டாம் (B) மூன்றாம் (C) ஆறாம் (D) ஏழாம்

50. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) 3-ம் வேற்றுமை | - | 1) பொன்னின் நிறம் அந்திவானம் | (A) | 4 | 1 | 2 | 3 |
| b) 4-ம் வேற்றுமை | - | 2) உளியால் சிலை செய்தான் | (B) | 2 | 4 | 1 | 3 |
| c) 5-ம் வேற்றுமை | - | 3) இராமனது வில் | (C) | 3 | 4 | 2 | 1 |
| d) 6-ம் வேற்றுமை | - | 4) கவிதைக்கு அழகு கற்பனை | (D) | 2 | 3 | 4 | 1 |

51. நம்பர்க்கு + அங்கு என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -------

(A) நம்பரங்கு (B) நம்மார்க்கு (C) நம்பர்க்கங்கு (D) நம்பங்கு

52. பிழையற்றத் தொடரைத் தேர்க

(A) அதைச் செய்தது நான் அன்று (B) பானையை உடைத்தது கண்ணன் அல்ல

(C) பகைவர் நீவிர் அல்லீர் (D) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை

53. பின்வருவனவற்றுள் தன்மை இடத்திற்கான எதிர்மறைத் தொடரைத் தேர்க

(A) அஃது அன்று (B) நீ அல்லை (C) அவன் அல்லன் (D) நான் அல்லேன்

54. 'உறுபசி' என்னும் சொல்லில் 'உறு' என்பதன் பொருள் -----

(A) நன்று (B) சிறந்த (C) கூர்மை (D) மிகுதி

55. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) சாயம் ஏற்றுதல் | - | 1) Tanning | (A) | 3 | 4 | 1 | 2 |
| b) பால் பண்ணை | - | 2) Dyeing | (B) | 4 | 1 | 2 | 3 |
| c) தோல் பதனிடுதல் | - | 3) Dairy farm | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) தறி | - | 4) Loom | (D) | 2 | 3 | 1 | 4 |

56. மணம், காவல், விரைவு, கூர்மை எனப் பல பொருள் தரும் ஒரு சொல் ------

(A) கடி (B) சால (C) உறு (D) நனி

57. பிரித்தெழுதுக 'விழுந்ததங்கே'

(A) விழுந்த + அங்கே (B) விழுந்து + அங்கே

(C) விழுந்தது + அங்கே (D) விழுந்தது + ஆங்கே

58. சரியானப் பொருளைத் தேர்க

1. வின்னம் ------ 2. தொல்லை -------

(A) சேதம், மிகவும் (B) மேகம், மிக வருந்தி (C) சேதம், பழமை (D) மிகவும், சரியாக

59. பொருத்துக

a) அவசரக் குடுக்கை - 1) இயலாத செயல்
b) கல்லில் நார் உரித்தல் - 2) எண்ணிச் செயல்படாமை
c) கானல் நீர் - 3) ஆராய்ந்து பாராமல்
d) கண்ணை மூடிக்கொண்டு - 4) இருப்பது போல் தோன்றும் ஆனால் இருக்காது

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

60. சரியான மரபுச்சொல்லைத் தேர்க

1. கோழி --------- 2. ஆ --------
3. இலை --------- 4. பால் --------

(A) கூவும், நிரை, பறி, குடி (B) கொக்கரிக்கும், நிரை, பறி, பருகு
(C) கொக்கரிக்கும், மந்தை, கொய், பருகு (D) கொக்கரிக்கும், நிரை, கொய், குடி

61. சரியான விடையைத் தேர்க

என் நண்பன் செய்த தொழிலுக்கு அவனுக்கு ----- பெருகிற்று

(A) காரி (B) ஓரி (C) வாரி (D) பாரி

62. கால்+ஆழி – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----

(A) கால் ஆழி (B) காலாஆழி (C) காலாழி (D) காலஆழி

63. “முல்லைக்குத் தேர் கொடுத்தான்” எவ்வகை வேற்றுமை இடம் பெற்றுள்ளது?

(A) 3-ம் வேற்றுமை (B) 8-ம் வேற்றுமை (C) 5-ம் வேற்றுமை (D) 4-ம் வேற்றுமை

64. “கிழமை” பொருளில் வரும் வேற்றுமை ------

(A) நான்காம் வேற்றுமை (B) ஆறாம் வேற்றுமை
(C) ஐந்தாம் வேற்றுமை (D) ஏழாம் வேற்றுமை

65. விடுபட்ட இடத்தை நிரப்புக

ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

------ துயரம் தரும்

(A) உற்றக்கால் (B) மேற்சென்று (C) தான்சாம் (D) நட்டல்

66. சரியான தொகை மரபு அறிக

(A) திராட்சைக் கொத்து (B) பலா தோப்பு
(C) வீரர் கூட்டம் (D) கம்பங்காடு

67. சரியான நிறுத்தற்குறியிடப்பட்டத் தொடரைத் தேர்க

(A)“குழந்தைதானே அவள்! வளர்ந்தால் சரியாகிவிடும்” என்றேன் நான்.
(B) குழந்தைதானே, அவள். வளர்ந்தால் சரியாகிவிடும்; என்றேன் நான்.
(C) ‘குழந்தைதானே அவள், வளர்ந்தால் சரியாகி விடும்; என்றேன் நான்.
(D) “குழந்தைதானே அவள் வளர்ந்தால் சரியாகிவிடும்” என்றேன் நான்.

68. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------

(A) நம்+இல்லை (B) நமது+இல்லை (C) நமன்+இல்லை (D) நமன்+நில்லை

69. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

(A) மூன்று (B) ஆறு (C) எட்டு (D) பத்து

70. கோடிட்ட இடத்தை நிரப்பு

திருவிழாவைக் காண -------- மக்கள் வந்தனர்

(A) தடையின்றி மிகுதியாக (B) மடைதிறந்த வெள்ளம் போல

(C) நகமும் சதையும் போல (D) நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல

71. கோடிட்ட இடத்தை நிரப்புக

உயர்ந்தோர் --------- புகழ்ந்து கொள்ள மாட்டார்கள்

(A) தம்மைத்தாமே (B) தன்னால் (C) தம்மால் (D) தன்னைத் தானே

72. 'யாணர்' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஓசை (B) வாட்டம் இன்றி (C) அஞ்சி (D) புதுவருவாய்

73. கனத்தமழை என்னும் சொல்லின் பொருள் -------

(A) பெருமழை (B) சிறுமழை

(C) எடைமிகுந்த மழை (D) எடை குறைந்த மழை

74. சரியற்ற மரூஉ சொல்லைத் தேர்க

(A) கோயம்புத்தூர் - கோவன்புதூர் (B) நாகப்பட்டினம் - நாகை

(C) தேவகோட்டை - தேவோட்டை (D) குற்றாலம் - குடந்தை

75. தவறான சொல்லையும் பொருளையும் தேர்க

(A) மறலி - யானை (B) பிலம் - மலைக்குகை (C) தூறு - புதர் (D) மண்டுதல் - நெருங்குதல்

76. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக

(A) வெம்+கரி (B) வெங்+கரி (C) வெம்மை+கரி (D) வெண்+கரி

77. "சிறியிலை நெல்லித் திங்கனி குறியாது

ஆதல் நின்னகத்து அடக்கிச் ..... " என்ற பாடல் வரிகளின் ஆசிரியர் யார்?

(A) நல்லாதனார் (B) ஔவையார் (C) அம்மூவனார் (D) பூதஞ்சேத்தனார்

78. வல்லினம் மிகும் இடங்களில் தவறான ஒன்றைத் தேர்க

(A) பாடத்தைப்படி (B) செல்லாக்காசு (C) அதுச்சென்றது (D) வட்டப்பாறை

79. வல்லினம் மிகா இடங்களுக்கு பொருத்தமான ஒன்றைத் தேர்க

(A) உவமைத்தொகையில் மிகாது (B) உம்மைத் தொகையில் மிகாது

(C) வினாத்திரிபை அடுத்து மிகாது (D) திசைப் பெயர்களை அடுத்து மிகாது

80. தவறாகப் பொருந்தியுள்ள எதிர்ச்சொல்லைத் தேர்க

(A) பொறை × பொறுமை (B) நிறை × குறை

(C) பொச்சாப்பு × சுறுசுறுப்பு (D) வா × போ

81. ‘ Pulses ’ என்ற சொல்லின் தமிழ்சொல்

(A) பருப்பு வகைகள் (B) மணி வகை (C) சதுப்பு (D) உயிர் நாடி

82. தவறான இணை

(A) நினைவகம் - Hard disk (B) கரிம உரம் - INORGANIC FERTILIZER

(C) எரித்துச் சாம்பலாக்குதல் - Incinerate (D) வன்பொருள் - Hardware

83. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) நிலவாழ் காட்சியகம் - | 1) Inorganic - Fertilizer | (A) | | 3 | 4 | 1 | 2 |
| b) நீர்வாழ் காட்சியகம் - | 2) Organic Fertilizer | (B) | | 3 | 4 | 2 | 1 |
| c) கரிம உரம் - | 3) Terrarium | (C) | | 4 | 3 | 2 | 1 |
| d) கனிம உரம் - | 4) Aquarium | (D) | | 3 | 2 | 4 | 1 |

84. “ Synthetic ” என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்

(A) வலிமையான (B) இயற்கை (C) செயற்கை (D) வலிமையற்ற

85. தவறான இணை

(A) சதுப்பு - Swamp (B) முகத்துவாரம் - Face Entrence

(C) மண்புழு உரம் - Vermi compost (D) தாவர உண்ணி - Herbivore

86. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) Ardent - | 1) நார்பயிர்கள் | (A) | 3 | 2 | 4 | 1 |
| b) Hemp - | 2) பாழடைந்த | (B) | 3 | 1 | 4 | 2 |
| c) Fiord - | 3) தீவிர | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) Desolated - | 4) பிளவுபட்ட கடற்கரை | (D) | 2 | 1 | 3 | 4 |

87. “Envoy” என்ற ஆங்கில சொல்லிற்கு நிகரான தமிழ்சொல்

(A) முகஸ்துதி (B) தூதுவர் (C) சரிவு (D) விடுதலை

88. “தானியம்” என்ற தமிழ் சொல்லிற்கு நிகரான ஆங்கில சொல் (அறிவியல்)

(A) Pulses (B) Adhesives (C) Cereal (D) Millets

89. வாக்கியம் 1: “புவி மாதிரி” தமிழ்சொல் “ Geiod”

வாக்கியம் 2: “புவி வடிவம்” தமிழ்சொல்“ Globe ”

(A) வாக்கியம் 1 சரி (B) வாக்கியம் 2 சரி (C) இரண்டும் சரி (D) இரண்டும் தவறு

90. “ Royal Insignia ”என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்சொல்

(A) சின்னம் (B) அரச சின்னம் (C) நிகர அமைப்பு (D) வெளிகாட்டுதல்

91. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) வேணி - | 1) இடை | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) மருங்கு - | 2) பெண்கள் | (B) | 3 | 1 | 4 | 2 |
| c) கூனல் - | 3) சடை | (C) | 3 | 1 | 2 | 4 |

d) மின்னார் - 4) வளைந்த (D) 2 3 4 1

92. "வண்மை" என்னும் சொல்லிற்கு பொருந்தாதது எது?

(A) கொடை (B) ஈகை (C) அன்பளிப்பு (D) பகை

93. "எய்யாமை" என்ற சொல்லின் பொருள்?

(A) இயலாமை (B) வருத்தம் (C) வருந்தாமை (D) இயலும்

94. தவறான இணை எது?

(A) அகம் – உள்ளம் (B) கடனே – கடன் பெறுதல்

(C) தானை – படை (D) அறிகை – அறிதல் வேண்டும்

95. "தாக்கும், இழுக்கும்" என்று பொருள்படும் சொல் எது?

(A) சாடும் (B) சினந்து பாய்தல் (C) எகிறி விழுதல் (D) தாவுதல்

96. தவறான இணை எது?

(A) தேற்றாதான் – கடைப்பிடித்தவன் (B) நிலை ஒழுக்கம் – மேலான பொருள்

(C) தூறு – புதர் (D) வித்து – விதை

97. வாக்கியம் 1 : "துன்னலர்" என்பதன் எதிர்ச்சொல் "உறவினர்" ஆகும்

வாக்கியம் 2 : "பரிவாய்" என்பதன் எதிர்ச்சொல் "கோபமாய்" ஆகும்

(A) 1 மட்டும் சரி (B) 2 மட்டும் சரி (C) இரண்டும் சரி (D) இரண்டும் தவறு

98. அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல் என்பது எதை குறிக்கிறது'

(A) சாயினும் (B) சான்றாண்மை (C) பெறினும் (D) சான்றோர்கள்

99. சரியான இணை காண்க

1. பதுமை – உருவம் 2. கனகம் – காடு 3. கடுகி – விரைந்து

4. நிவேதனம் – நம்பிக்கை 5. மேழி – ஏர்

(A) 1, 3, 5 சரி (B) 1, 4, 5 சரி (C) 2, 3, 4 சரி (D) 1, 3, 4, 5 சரி

100. சரியானதை தேர்ந்தெடு

(A) கிரீடம் – மணியழகு (B) கிரீடம் – மணிமுடி

(C) கிரீடம் – பொன் (D) கிரீடம் – மணி